stered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 9

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 38 | விசுவாவசு புரட்டாசி 1965 செப்டம்பர் | இதழ் 9

உள்ளுறை

பத்திராசிரியர்: மூ. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

பிற செய்திகள்

அரியலூர் மணிவாசக மன்றத்தின் சார்பில் 31-7-65, 1-8-65-ல் கந்தபுராண விரிவுரைகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் தமிழ்ப் பெரும் புலவர் உயர்திரு. அ. நடேச முதலியார் அவர்கள் ஆற்றினர்கள்.

மேற்குறித்த மணிவாசக மன்றத்தின் 22-ஆம் ஆண்டு நிறைவு விழா புதுவை S. சென்னியப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பல அறிஞர் பெருமக்கள் சமயச் சொற்பெருக்குகளுடன் விழா சிறப்புற நிறை வெய்தியது.

ஆடுதுறை அப்பர் அருணெறிக் கழக 17-ஆம் ஆண்டு நிறைவு விழா 14-8-65 சனி மாலை ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது. திரு. சுந்தரேசன் செட்டியார் B. A., L.T. அவர்கள் தலைமையில் வித்துவான் திரு. தா, ம. வெள்ளைவாரணம், வித்துவான் திரு. மு. சண்முக தேசிகர் ஆகியோர் பேசினர்,

திருமயிலை கபாலீச்சுரத்தில் 11-8-65 முதல் 22-8-65 முடிய பன்னிரு திருமுறை விழா மிகச் சிறப்பாக நடை பெற்றது. ஏறக்குறைய 16 தேவாரப் பண்ணிசைவாணர்கள் பல ஊர்களிலிருந்தும் வந்து தேவார இசை அமுதமழை பொழிந்தார்கள். கடைசி நாளன்று சமாஜச் சார்பில் அவர் களுக்கு சமாஜ அன்பளிப்பாக நம் வெளியீடுகளை வழங்கிச் சிறப்புச் செய்தது.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபைக் கட்டிடத்தில் 16-7-65 முதல் 16-8-65 முடிய சித்தாந்தப் புலவர் மாமணி பாலகவி வே இராமநாதன் செட்டியார் அவர்களைக் கொண்டு நடத்திவந்த சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய "உண்மை விளக்கம்" "திருவருட் பயன்" இவைகளின் பாட வகுப்பு நிறைவு விழா 16-8-65-ல் திருக்குறள்வேள் திரு. G. வரதராஜப் பிள்ளை B. A. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பல அன்பர்கள் "பாலகவி" அவர்களைப் பாராட்டிப் பேசினர்கள்.

இந்த ஒரு மாதத்தில் 14 சைவ அன்பர்களுக்குச் சமய தீட்சையையும், இரு சைவ அன்பர்களுக்கு விசேஷ தீட்சையையும் "பாலகவி" அவர்கள் சைவ ஆகம முறைப் படி செய்து வைத்தார்கள்.

2-8-65-ல் சுந்தரர் திருநாள் கொண்டாடப் பெற்றது. பாலகவி அவர்களே பேசினர்கள்.

புரசைத் திருநெறிக் கழக 54-ஆம் திங்கள் வழிபாடு 22-8-65 ஞாயிறன்று மதுராந்தகம், தோட்டனூர், ஏறுபாக்கம் கிராமக் கோயில்களில் சிறப்புற நிகழ்ந்தது.

Reg. M. 2330　　　　உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38	விசுவாவசு புரட்டாசி செப்டம்பர் 1965	இதழ் 9

மணலி தமிழ்க் கல்லூரி

(துணையாசிரியர்)

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் ஒரு தனித் தமிழ்க் கல்லூரி யில்லையே என்ற எண்ணம் பல அறிஞர் பெருமக்களிடையே தொன்றுதொட்டு நிலவிக் கொண்டிருந்தது. இடையே சில முயற்சிகள் இக்கல்லூரி நிறுவுவதற்கென நிகழ்ந்தாலும் அவை உருப்பெறவில்லை. கடைசியாகத் தமிழ்வளர்ச்சி மன்றம் என்ற ஒரு அமைப்பு தனித்தமிழ்க் கல்லூரி ஒன்று தலைநகரில் நிறுவ வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதற்கென ஒரு கல்லூரி அமைப்புக் குழுவையும் நிறுவியது. அக்குழுவினர் பலவாறு முயன்றனர். முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுல் முடியுமன்றே? பல்கலைக் கழகத்தினர் விரும்பியவாறு பொருள் காட்ட இயலா நிலையில் அக்குழுவினர் வருந்தினர், இவ்வமயம் மணலி இலக்கு

மண முதலியார் அறநிலையத் தனிப்பொறுப்புப் பரம்பரை தர்மகர்த்தர் உயர்திருவினர் மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் இக்கல்லூரியைத் தங்கள் அறநிலையத்தின் சார்பிலேயே நடத்த முன் வந்தார்கள். இதனைத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சிறந்த பேறு என்னலாம்.

மணலி அறநிலையச் சார்பில் 9-8-65 ல் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள சீநிவாச நிலையத்தில் மணலி தமிழ்க்கல்லூரி முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அறநிலைய ஆணையர் திரு. M, S. சாரங்கபாணி முதலியார் அவர்களும் நீதிபதி திரு P. S. கைலாசம் அவர்களும் மற்றும் பல அறிஞர் பெருமக்களும் இத்தமிழ்க் கல்லூரி என்றும் நின்று நிலவி, வருங்காலத் தமிழுலகுக்கு ஆற்ற வேண்டியகடமை குறித்தும் இதனை ஏற்படுத்திய மணலி குடும்பத்தினரின் வள்ளன்மை குறித்தும் பலவாறு புகழ்ந்து பேசினர்.

தற்போது இளம்புலவர் வகுப்பில் 20 மாணவர்கள் உண்டியும் உறையுளும் இலவசமாகப் பெற்றுப் படிக்கின்றனர். இக்கல்லூரியின் ஒரு தனிச்சிறப்பு யாதெனில் சமயபோதனைக்கெனச் சிறிது நேரம் ஒதுக்கி மாணவர்களைச் சமய அறிவு பெறச் செய்வதேயாம். பிற சமயத்தினர் அவ்வச்சமயிகளுக்குச் சமய விளக்கம் ஒல்லும் வகையான் வழங்கிக் கொண்டிருக்கும்போது நம் சமயத்தாருக்கு மாத்திரம் சமய விளக்கம் கொடுக்க நம் சமயத் தாபனங்கள் முனைவதில்லை. அவற்றிலும் நம் சமய நிலையங்களால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்களிலாவது கற்கும் மாணவர்களுக்குக் கிறித்தவப் பள்ளிகளில் நிகழ்வது போன்று நம் சமய விளக்கம் குறித்த போதனை நிகழ்த்தலாகாதா? இது கருதியே நம் சமாஜத்திலிருந்து அறப்பயிற்சி மாலை என்ற ஒரு நூல் மாணவர்களுக்குச் சமய விளக்கம் தரத் தக்க நிலையில் வெளியிடப் பெற்றது. அதனை நம் சமய நிலையங்களால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்களுக்கெல்லாம் மாதிரிப்படியாக அனுப்பி அந்நூலைப் பயன்படுத்தி மாணவருலகத்துக்குச் சமய விளக்கம் தருமாறும் வேண்டினோம். நூற்றுக்கு மேற்பட்ட சைவசமயத் தாபனங்கள் நடத்தும் கல்வி நிலையங்களிருந்தும் சிதம்பரம் ஆறுமுக

நாவலர் உயர்நிலைப் பள்ளியைத் தவிர வேறு எக்கல்வி நிலையமும் இச்சமய போதனை வகுப்பை மாணவர்களுக்கு நடத்த முன்வரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிற சமயத்தவர் தம் சமயத்தைப் பரப்ப மேற்கொள்ளும் முயற்சிகளை நோக்கும்போது நம் நிலை எவ்வளவு தாழ்ந்திருக்கிறது என்பதை உற்று நோக்குமின். மணலி தமிழ்க் கல்லூரி போன்று பிற கல்லூரிகளிலும் தமிழறிவோடு சமய அறிவையும் மாணவர்களின் மனத்தில் மலரச் செய்மின். ஆசிரிய உலகத்தில் சமய அறிவு மலர்ந்தால்தான் மாணவருலகில் அவ்வறிவு வாய்க்கப்பெறும் என்பது ஒருதலை. முன்னர் திருமடங்கள் பாடஞ் சொல்லும் பணியை மேற்கொண்டதாலேயே பல சமய அறிஞர்கள் விளங்க வாய்ப்பாயிருந்தது. தற்போது பல்கலைக் கழகம் அப்பணியை மேற்கொண்டதால் அத்துடன் இணைத்துச் சமய அறிவையும் பரப்ப வேண்டுவது மிக இன்றியமையாத ஒரு பணியாகும். ஆகவே திருமடங்கள், திருக்கோயில்கள், பிற அறநிலையங்களால் நடத்தப் பெறும் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகிய எல்லாவற்றிலும் சமய போதனைக்கென ஒரு பாட வேளையாவது ஒதுக்கி அதனை நடத்த முன் வருமாறு வேண்டுகின்றோம்.

மணலி தமிழ்க் கல்லூரியும் அதனை நடத்த முன்வந்த மணலியார் குடும்பமும் நீடு தழைத்துத் தமிழுலகில் சிறந்து மிக்கோங்க எல்லாம்வல்ல இறைவன் திருவருளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

சமாஜச் செய்திகள்

26-9-65 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

நமது சமாஜ மணி விழா திசம்பர் 31, சனவரி 1, 2-ஆம் நாட்களில் சிதம்பரத்தில் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் நிகழும் என்பதை அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்,

திருச்சடைமுடி

மு. அ.

சடைமுடி என்ற வைப்புத் தலம் இன்று சடையார் கோயில் என்று வழங்குகிறது. இது தஞ்சாவூர் ஜில்லாவில் சுவாமி மலையிலிருந்து கல்லணை (கிராண்டு அணைக்கட்டு) செல்லும் பஸ் மார்க்கத்தில் கோவிலடி என்ற ஊருக்கு வடக்கே கொள்ளிடக்கரையில், கோவிலடியிலிருந்து இரண்டு மைல் தூரத்திலும், கரையிலிருந்து ஒருபர்லாங் தெற்கிலும் உள்ளது. கரையை விட்டிறங்கி இரண்டு வயல் தாண்டிக் கோயிலுக்குச் செல்ல வேண்டும். கோயில் ஒரு மாந்தோப்பின் நடுவில் முழுமையும் இடிந்த நிலையில் உள்ளது.

இவ்விடம் சடையார் கோயில் என்று வழங்குகின்றது. சடையார் என்பது சடையுடைய சிவபிரான். இது சடைமுடி என்ற பெயருக்கும் பொருத்தமாயிருக்கிறது.

கோயில்: இந்த இடம் சுற்றுப்பக்கமுள்ள நிலங்களோடு சேர்ந்து மைசூர் திவானாயிருந்த மாதவராவ் அவர்களின் சொத்தாக இருந்தது. அவர்களுக்குப் பின்வந்த வாரிசுகள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு சரியாகக் கோயிலைப் பராமரிக்காமல் இடிந்துபோகும்படி விட்டு விட்டார்கள். இதற்குத் துணையாக 1954 இல் கொள்ளிடத்தில் உடைப்பு ஏற்பட்டுக் கோயில் அழிந்துபோயிற்று. இது பல்லவர் காலத்துப் பழைய கருங்கற் கோயிலாக இருந்திருக்கிறது. கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், சுவாமி உச்சியின் மீதுள்ள விமானம் இவைகளெல்லாம் கருங்கல்லால் செய்யப் பெற்றிருந்தன. யாவும் அழிந்துபோகவே அக் குடும்பத்தார் அம்பாள் கோயிலைப் புதிதாக 1924-க்குப் பிறகு செங்கல்லால் சிறு கட்டிடமாகக் கட்டி அம்பாளுக்குரிய அர்த்தமண்டபத்தில் மகாலிங்கத்தை வைத்திருக்கிறார்கள். கோயில் இருந்த காலத்தில் பரிவார தேவதை

களின் கோயில்களும் சிறப்பான மதில் சுவரும் இருந்திருக்கின்றன. நல்ல கிணறு ஒன்று கோயிலின் கீழ்ப்புறத்தில் இன்றும் இருக்கிறது. கோயிலுள்ள இடம் இப்போது மாந்தோப்பும் நெற்களமுமாகக் காட்சி தருகிறது.

மூர்த்தி: சுவாமி பெயர் சித்தீசுவரர், அம்பிகை சித்தாம்பிகை. மகாலிங்கம் பளபளப்பான கல்லில் செய்த பெரிய உருவம். சுயம்பு என்று சொல்வார்கள். மிகவும் ஆழத்தில் மூர்த்தி இருந்தார். அதிகச் சிரமப் பட்டுத்தான் பெயர்த்து அப்பால் கொண்டுபோய் வைக்க முடிந்தது என்று சொல்கிறார்கள். அம்பிகை பெரிய வடிவம். வெள்ளிக்கிழமை மட்டும் கோவிலடி திவ்விய ஞானேசுவரர் ஆலயத்தில் பூசை செய்யும் குருக்கள் இங்குவந்து பூசை செய்துவிட்டுப் போகிறார்.

தென்புறக் கோட்டத்தில் விநாயகர்; தக்ஷிணாமூர்த்தி நின்ற திருக்கோலம்; பின்புறத்தில் இருந்த அர்த்த நாரீஸ்வரர் உருவம் அரசினரால் சென்னை மியூசியத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. வடபுறம் கோட்டத்தில் பிரமன் வடிவம். சண்டேசர் ஒரு மூலையில் தரையில் கிடக்கிறார். அம்பிகை கோயில் வாயிலில் வைக்கப்பட்டுள்ள மற்றோர் உருவம் இன்னதென்று விளங்கவில்லை. இது நின்ற கோலம். வலக் கை அபயகரம்; இடக் கை தொடையில்; மற்ற இரண்டும் ஒரு ஜப மாலையையும் ஓர் ஆயுதத்தையும் தாங்கி இருப்பனபோல் தெரிகின்றன. குத்திட்டு உட்கார்ந்து வலக் கால் ஊன்றி மற்றொரு உருவம் உள்ளது; வலக்கை தூக்கிப் பிடித்திருக்கிறது.

இடைமருது ஈங்கோய் இரா மேச்சுரம்
        இன்னம்பர் ஏர்இடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
        தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலம் கொள்ளம் பூதூர்
        கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு

கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே.

என்ற அப்பர் சுவாமிகள் அடைவு திருத்தாண்டகம் சடைமுடி கடைமுடிஎன இரண்டு தனித்தனித் தலங்களைக் குறிப்பிடுகிறது. மேலும் சம்பந்தர் புராணத்தில் "அன்பிலாலந்துறையின் முன்னவனைத் தொழுது போற்றிப் பதிகநிறை செந்தமிழ் பாடிச் சடைமுடியார் பயில் பதியும் பணிந்து பாடி" (398) என்ற பாடல் இச்சடைமுடி என்ற ஊரைக் குறிப்பதென்றார், இங்கு சம்பந்தர் பதிகம் பாடியிருந்து பின்னர் பதிகம் இறந்துபோயிற்று என்றும் கருதுவதுமுண்டு; இதற்கு நேர் வடக்கே கொள்ளிடத்தின் மறுகரையில் அன்பிலாலந்துறை முதலான தலங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு: இடிந்திருக்கின்ற கோயில் வெளிப்புறம் முழுமையும் கல்வெட்டுக்கள். கோயில் வெள்ளத்தால் அழிவெய்தியபோது கல்வெட்டுக்களும் சில மண்ணுள் புதைந்து போயின. கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம் அடி வரிகள் பல மிகவும் ஆழத்தில் பூமியுட் புதைந்து போயின. பல கல்வெட்டுக்களில் திருச்சடைமுடி யுடைய மகாதேவர் என்று காணப்படுகிறது. சுவாமி கோயில் முன்வாயில் நிலைகள் இரண்டிலும் உள்ள பூர்த்தியான கல்வெட்டுக்கள் சடைமுடி யென்றே கூறுகின்றன.

குறிப்பு: சடையார் கோயில் என்று இன்று வழங்குமிடம் பக்கத்திலுள்ள கோவிலடியாகிய திருப் பேர்ப்புறம் என்னும் திருமால் கோயிலின் வட பிடாகைக் கிராமம். கோவிலடியே ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருப் பேர் நகர். சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சோழன் கோச்செங்கணான் பிடித்துச் சிறைவைத்த இடமாகிய திருப் பேர்ப் புறம் இதுவேயாகும்.

கோவிலடியில் பெருமாள் கோயிலுக்கு வடக்கேயுள்ள சிவன் கோயிலை சடைமுடி நாதர் கோயில் என்று

சிலர் கருதுவது சரியன்று. இக்கோயில் கோவிலடி திவ்ய ஞானேஸ்வரர் கோவில்; இதுவும் கல்வெட்டுக்களுடைய பழைய கோயில். ஆனல் சடைமுடி என்பது; மேற்குறித்த வாறு, கொள்ளிடக்கரையில் உள்ள இடிந்த கோயிலே யாகும்.

இக் கோயில் இடிந்த கற்களையெல்லாம் எண்ணிட்டு எடுத்து அடுக்கிவிட்டு முழுமையும் புதிதாக மறுபடியும் கட்டி வைப்பது இன்று சாத்தியமான காரியம். அறநிலைய மேற்பார்வை இலாகா இதைச் செய்வது தேவாரப் பெரு மையும் சரித்திரப் பெருமையும் உடைய ஒரு சிவ தலத்தைக் காத்த பெரும் புண்ணியச் செயலாம். இன்று கோயிலருகே யாரும் எளிதில் போய்ச்சேர முடியாது. வைராக்கிய நெஞ்சுடையவர்கள் மட்டுமே இங்குப் போகமுடியும். சம்பந்தப் பெருமானும் அப்பரடிகளும் இங்குப்போய் வழி பட்டார்கள். இக்காலம் பல்லவர்கள் காலமாதலால் கோயில் நல்ல நிலைமையிலிருந்தது.

பல்லவர் கல்வெட்டுடைய இக்கோயில் இந்த நிலையில் இருப்பது பார்க்க யாருக்கும் மிக்க மனவேதனையாயிருக் கும். ஓர் ஐயாயிரம் செலவிட்டால், பிரித்துக் கட்டி, மீண்டும் இதைக் கோயிலாக்கி விடலாம். எத்தனையோ கோயில் களில் ஒரு நாளைய ஆடம்பர விழாவுக்குச் செலவாகிற தொகை இதற்குப் புது வாழ்வு கொடுக்கும்.

அற நிலைய இலாகாவும் கல்வெட்டிலாகாவும் இதை உடனே கவனிக்க வேண்டும்.

புரட்டாசி மாத விசேட தினங்கள்

8 (24- 9-65) அருணந்திசிவாச்சாரியார் விழா
18 (4-10-65) ஏனாதிநாத நாயனர் விழா
,, ,, கலைமகள் விழா
21 (7-10-65) நரசிங்கமுனையரையர் விழா
25 (11-10-65) உருத்திரபசுபதி நாயனர் விழா
28 (14-10-65) திருநாளைப்போவார் நாயனர் விழா.

முருகாற்றுப்படையில் முருகன் வழிபாடு

வித்துவான் பெ. கோவிந்தன்

—★—

சங்க நூல் தொகைகளுள் ஒன்ருகிய பத்துப் பாட்டுத் தொகையுள் முருகாற்றுப்படை ஒன்ற. அது பிற்காலத் துப் பன்னிரு திருமுறைகளுள் பதினொராந்திருமுறை களுள்ளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. முருகாற்றுப்படை தமிழர் சமயத்தைக் கூறும் முதல் நூலாம். அதனை இயற்றிய ஆசிரியர் நக்கீரர் முதற் சமய குரவராவர். முருகாற்றுப்படை முருகன் கடவுள் தன்மைகளையும் உருவங் களையும் அவன் எழுந்தருளிய கோவில்களையும் பொது இடங்களையும் அவனை வழிபட்ட முறைகளையும் பயனையும் எடுத்துரைக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் கொண்ட சமய முறைகளை முருகாற்றுப்படை இக்கால மக்களுக்குத் தெரிவிக்கிறது. அவற்றை இக்கால மக்கள் கடைப்பிடித்து வருகிருர்கள். கடவுளர்களுக்குக் கோவில்கள் எடுத்தலும் உருவங்களை அமைத்தலும் நாள் வழிபாடும் விழா வழிபாடும் நடத்தலும் தமிழர் சமய முறை களாம். பார்ப்பனரும் தமிழர் முறையில் தம் உச்சியில் கைகளைக் குவித்து முருகனைக் குறிக்கும் ஆறெழுத்து மந்திரம் ஓதி ஏரகத்தில் அவனை வழிபட்ட செய்தியை முருகாற்றுப்படை (185–7) கூறுகிறது.

கடவுள் தன்மை

முருகன் ஆலமர் கடவுளாகிய சிவபெருமான் மகன். மலைமகளாகிய கொற்றவை மகன் (256–7). அவன் விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவன் (267). மெய்யறிவில் பிறரோடு ஒப்பில்லாதவன் (280). உயிர்களால் அளந் தறிதற்கரிய பெருமைகளையுடையவன் (278) திருவாவினன்குடியில் முருகனை வணங்கிய காட்சி போலவே மக்கள் இன்றும் வணங்குகின்றனர்… திருயாலுக்கும்

உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் நான்முகனுக்கும் தலைவன் (150-65).

உருவம்

முருகன் விளங்கும் ஒளியையும் வலியதாள்களையும் தடக்கைகளையும் மாலையசையும் மார்பையும் உடையவன். (1–11) ஆறுமுகங்களையும் பன்னிரண்டு கைகளையும் உடையவன்; (90–117) வானிடத்தே பல்லியங்கள் முழங்க, கொம்புகள் மிக்கொலிக்க, வெண்சங்கு முழங்க, முரச முழங்க, வான் வழியாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் திறகுச் செல்வான். (119–25)

கோவில்கள்

முருகனுக்குத் தமிழ் நாட்டில் பல கோவில்களிருந் தன. அவற்றுள், திருப்பரங்குன்றத்தையும் ஆலவாயை யும், ஆவினன் குடியையும் ஏரகத்தையும் பழமுதிர்சோலை யையும் முருகன் சிறப்புடைக் கோவில்களாகக் கொண் டருளினன். நாட்டிலுள்ள குன்றங்களையும் (217) காடுகளை யும் காவுகளையும் துருத்திகளையும் யாறுகளையும் சந்திகளையும் கடம்ப மரங்களையும் பொதியில்களையும் கந்துடை நிலைகளை யும் (223–6) தான் எழுந்தருளியிருக்கும் பொது இடங் களாகக் கொண்டான்.

வழிபாடு

முருகன் கோவில்களுக்கு மக்கள் சென்றவிடத்து அவன் பெயர் பலவற்றைக் கூறினர்.

ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!

மங்கையர் கணவ! மைந்த ரேறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!
அரும்பெறன் மரபிற் பெரும் பெயர் முருக! (256-69)

என்று மக்கள் முருகனை விளித்து முகனமர்ந்து ஏத்திக் கைகளால் தொழுது காலில் விழுந்து வணங்கினர். (251–2)

கோவிலை அமைவரப்பண்ணி, நெய்யொடு வெண்சிறு கடுகு அப்பி, மந்திரம் உரைத்து வணங்கி, வழிபட்டு, மலர்கள் தூவி, கையில் காப்புக் கட்டி, வெண்பொரி தூவி, உதிரத்தோடு பிசைந்த வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டு, பலபிரப்பு வைத்து, மஞ்சள் நீரும் சந்தன நீரும் தெளித்து, செவ்வலரி மாலைகளைத் தூக்கி நாலவிட்டுப் பசியும் பிணியும் பகையும் நீங்குக என்று வாழ்த்தி, நறும்புகை கொடுத்து குறிஞ்சிப் பண்ணைப் பாடிப் பல்லியம் முழங்கக் குறமகள் முருகனை வரவழைத்தாள். (228–44) வேலன் வெறியாடுகளம் அமைத்து வழிபட்டான்(222)சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியறுத்துக் கோழிக் கொடியோடு முருகனை நிற்கும்படி நிறுத்தி ஊர்களில் மக்கள் முருகனுக்கு விழா எடுத்தனர். (218–20). விழாவிலும் வெறியயர் களத்திலும் காடு, கா, துருத்தி முதலிய இடங்களிலும் பாட்டுக்கள் பாடியும் கொம்புகள் ஊதியும் மணிகளை யடித்து ஒலிப்பித்தும் முருகனுடைய ஊர்தியாகிய யானையை வாழ்த்தியும் மக்கள் முருகனை வழிபட்டனர் (245–7).

வணங்கிய மக்களுக்கு முருகன் மணங்கமழ் தெய்வத் தன்மையுடைய தன் வடிவத்தைக் காட்டி, நீ "நினைத்துவந்த வரவை யான் அறிவேன். நீ உள்ளத்தில் அஞ்சுதலை நீக்கு" என்று அருளிச்செய்து உலகில் ஒப்பற்று விளங்கும்படியும் கேட்டின் நீங்கும்படியும் அவரவர் வேண்டும் பரிசில்களைக் கொடுத்தான்.

முருகாற்றுப்படைக் காலத்துத் தமிழர் சமய வழிபாட்டு முறைகள், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட இக்காலத்திலும் காணப்படுகின்றன. தமிழர் தங்கள் சமய முறைகளை இன்றும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மெய்மொழிச் சரிதை—1

(வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணி)

மெய்கண்ட சாத்திர நூற்பொருளமையச் செய்யப்பெற்றனவும் சிவாகமங்களின் பொருளமையச் செய்யப்பெற்றனவும் ஆகிய தமிழ்ச் சைவநூல்கள் பல, சிறியனவும் பெரியனவுமாய் ஏட்டுவடிவில் அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள், சிவாகமப் பொருளமையச் செய்யப்பெற்ற சைவநூல்களில் ஒன்று மெய்மொழிச் சரிதை.

என்னிடம், மெய்மொழிச் சரிதை மூலமுமுரையும் கூடிய ஏடொன்றுள்ளது. அது பரபக்கம் சுபக்கம் என இரண்டு பகுதிகளுடையது. பரபக்கத்தில் முகவுரையாகிய பாயிரம் அமைந்துள்ளது. காப்புச் செய்யுள், ஆசிரியர் பெயர், காலம், அவையடக்கம், நூல் மரபு ஆகியவற்றை யுணர்த்தும் செய்யுட்கள் உருக்குலைந்து சிதைந்து போயின. இந்த நூலாசிரியர் எந்தத் திருமரபைச் சேர்ந்தவரென்பதும் விளங்கவில்லை. மாயாவாத மதத்தைக் கண்டனம் செய்யும் செய்யுட்கள் பரபக்கத்தில் காணப்படுவதால் இது சைவ சித்தாந்த மரபைச் சேர்ந்த நூலேயாம்.

வேதம் வல்ல அந்தணர்களே சாதிபேதம் கூறுகின்றனர். சிவாகமம் ஞானபாதம் கூறுவதாகலின் சாதிபேதமில்லை என்று இந்நூலின் பரபக்கத்திலுள்ள சாதிபேத கண்டனம் பற்றிய செய்யுட்களிலொன்று கூறுகின்றது. பாயிரம் ஒன்பது செய்யுட்களையுடையதென்பது சிதைந்து போன பாயிரச் செய்யுளின் ஈற்றிலுள்ள கூ என்னும்

எண்ணினும் "முகவுரை முற்றிற்று" என்று எழுதப் பட்டிருத்தலினுலும் தெரிகின்றது. பாயிரத்தில் சிதைந்து போன பாடல்களினடிகளும் உரையுமாகியவற்றுள் இரண்டொன்று காட்டுகிறேன்.

"மக்கள்பார் மணலூண் அன்ன வசனமாத் திரத்தால் முத்தி
பொக்கமே சொல்லா திந்நூல் பொ......"

"மெய்மொழியால் நாமம் மெய்மொழிச் சரிதை யென்றே ஆகமத்தின் பொருளைத் தமிழிற் சொல்லிற்றுத லால் புதிதன்று. இதனுடைய விசேட விதியைக் கைக் கொள்க.

இறைவனுய் இருந்துள்ள பரமேசுவரன் அருளிச் செய்யாநின்ற மூலச் சதுர் வேதங்களாயுள்ள இருபத் தெட்டு......"

"பரப்பாலும் கால சுபாவத்தாலும் இக்காலத்து மனிதர்க்கும் அற்பவாயுத்தும் அற்பவீரியமும் அற்பபுத்தி யும்...அறியக் கூடாது. ஆதலாற்றயிரைக் கடைந்து வெண்ணெய் வாங்கினுற் போலவும் பலபூக்களினின்றும்... தங்களினுடைய சாராசாரங்களை யெடுத்துத் தொல்லா தன சொற்களைப் படாதே சுருக்கித் தமிழ் மொழியில்... ஏதுவாயிருந்துள்ள இந்தப் பிறவியை யொழிக்கும் உபா யம் என்னென்று மிகவும் பயப்பட்டு......"

இந்நூலின் சுபக்கத்தில் கூறப்படும் 5 பகுதியாகிய தத்துவ சிருட்டிப் பகுதியின் இறுதியிலுள்ள தனி வெண்பாவொன்றினல் இந்நூலாசிரியர் இளங்காரிகுடி மெய்மொழித் தேவர் என்று தெரிகின்றது.

"எண்ணிலாப் புத்தாதி யெப்பொருட்குந் தட்டறுத்து
விண்ணிலார்க் கும்மரிய வீட்டின்பம்—பண்ணி
விளங்குமிளங் காரிகுடி மெய்மொழித் தேவன்
களங்கமறுத் தானிந்நூல் கண்டு"

பரபக்கம் 124 பாடல்களாற் செய்யப்பட்டது. உலோகாயத முதல் சாதி பேத மீருன பல பகுதிகளை யுடையது அவற்றுள் சாதிபேதம் கூறும் பகுதியே சிதை யாமலுள்ளது. எஞ்சியவை மிகவும் சிதைந்துபோயுள்

ளன. அவற்றிலிருந்து சில பாடல்களும் உரையும் கீழே காட்டுதும்.

காலமேகர்த்தா

வேலமுட் கூச்சிட் டாரும் விளாங்கனி திரட்டி னூரும்
சாலமுன் ஞேர்ந்து பார்க்கி லில்லைத் தன்னியல்பே
யன்றோ
மூலம்வித் திலைகாய் பூண்டு மூண்டெழு மழையுங் காற்றும்
காலங்கள் புரியத் தோன்றிக் கழிதல்போற் காலங் கர்த்தா

எ. து. வேலமுள்ளைக் கூச்சிட்டவநம் விளாங்கனியைத் திரட்டினூருமில்லை. மிகவும் விசாரித்துப் பார்க்குமிடத்துத் தன்னியல்பன்றோ; அது நிற்க, கிழங்குகள் வித்துக்கள், இலைகள், காய்கள், பூண்டுகளிவை மூண்டெழுந்து பெய்கிற மழையுங் காற்றுமிவை காலவசத்தாற்றோன்றிய பின்புங் காலவசத்தாலே கழிகிறுப்போல விவ்வுலகத்தினுடைய சிருட்டிதிசங்காரத்துக்குக் காலமே கர்த்தாவென்றவாறு.

சடங்களா மாபூ தங்கள் தனித்தனி புணர்ச்சி காலம்
அடங்கலுஞ் சகத்திற் றோன்று மவயவ மாத லாலே
சடங்கள்கா லங்கள் செய்யச் சம்பவித் திடாது கன்மம்
அடங்கலு மறிந்து தந்த மளவினிற் செய்வான் வேண்டும்.

எ, து. சடங்களாயிருந்துள்ள பூதந்தனித்தனி சம்பந்தித்த காலமானதுஞ்சடம. இந்தச் செகத்தெல்லாம் அவயவங்களை யுடைத்தாதலினுலே சடமாயறிவின்றியே யிருந்துள்ள காலமானது செய்யச் சம்பவியாது செய்தார் செய்த கன்மமெல்லாத்தையும் பார்த்து அவ்வவர்கன்மங்களுக்குத் தக்க வளவிலே செய்வானொரு சருவக்கியானன் வேண்டுமென்றவாறு,

சுபக்கம் இப்பகுதி முற்றுமுள்ளது. 362 செய்யுட்களையுடையது. அப்பகுதி முற்றும் பரிசோதித்து அச்சியற்றத் தகுந்தது. இது பதிபேதமுதல் வினுவுரையீருகப் பத்தொன்பது பகுதிகளுடையது. முற்றும் உரையுடன்

கூடியது. அவற்றினின்றும் சில செய்யுட்களும் உரைகளும் கீழே காட்டுகின்றேன்.

பதிபேதம்

அமைவிலின் பக்க ரைக்கிங் கறிவெனுந் தோணிபற்றிக்
கமைவிலாப் பிறவிப் பௌவங் கடந்தேற லுறுகின் றேற்குச்
சமயமாம் பார்தாக் காமற் றவிர்த்துநீ கொடுபோந் தாற்போல்
எமையையா ளுடையாய் நல்கா யிருஞ்சிவ னுக மார்த்தம்

எ. து. சீடன் குருவை வணங்கிக் கேட்கிறுன். ஆராத சுக சுவரூபமான மோட்சமாகிற அந்தக்கரைக்கு ஞானமாகிய தோணியையுடையாதபடி நோக்கிக் கொண்டு காமக்குரோதலோப மோகமதமாற்சரியங்கள் ஒருக்காலுமிடையருதே யிருந்துள்ள துக்கசாகரத்தைக் கடந்தேற நினைக்கின்றேற்குப் பௌத்த ஆருகத மீமாஞ்சை நையாயிக லோகாயத மாயாவாதங்களென்று சொல்லப்படா நின்ற சட்சமயங்களாகிற பார்பட்டு (பாறை) அறிவாகிற தோணியுடையாதபடி நோக்கிக்கொண்டு போந்தாற்போல சுவாமீ! பெரிதாயிருந்துள்ள ஆகமத்தின் பொருளையருளிச் செய்யவேண்டுமென்றவாறு. (1)

நாதனற் சிவாக மஞ்சொல் நாலுபா தத்துள் ஞான
பாதநற் பொருள்கள் மூன்றும் பதிபசு பாச மென்றே
ஆதிநற் பதிசி வன்ருன் அணுப்பசு பாச மைந்தாம்
தீதிலாப் பதியா யுள்ள சிவமுதல் தத்து வங்கேள்

எ. து. சிவாகமத்தில் கூறப்பெற்ற ஞானயோகக் கிரியாசரியை என்னும் நாலில், ஞானபாதத்திற் சொல்லப்பட்டன பதிபசுபாசமூன்றே. மூன்றில் பதியாயுள்ளவன் சிவன். பசுவென்பது அணுவாயுள்ள ஆன்மாக்கள்; ஆன்மாக்களைப் பந்தித்துள்ள பாசங்கள் ஐந்தாம். கேடில்லாத சிவன் முதலாயிருந்துள்ள தத்துவங்களைச் சொல்லுகிறேமென்றவாறு. (2)

திரிவித தத்து வங்கள் சிவசதா சிவம்ம கேசம்
விரியுநற் சிவமதொன்றும் விளம்பிடிற்சகளமல்ல

புரிதரு சகளா சகளம் பொருந்திடுஞ் சதாசி வன்ருன்
தெரிதரு சகள மாகுஞ் செப்பிடில் மயேச மன்றே

எ. து. சிவதத்துவங்களானவை மூன்று வகைப்படும். அவை தானே சிவமொன்றும் சதாசிவமைந்தும் மகேஸ்வர மிருபத்தைந்துமாம். அது சொல்லுமிடத்துச் சிவமென்பது நிட்களமாயிருக்கும். சதாசிவமென்பது சகள நிட்கள மாயிருக்குங். மகேஸ்வரமென்பது சகளமாயிருக்குமென்றவாறு. (3)

மன்னுநற் சிவம தேகம் மதித்திடிற் சதாசி வன்ருன்
பன்னிடு பஞ்ச பேதம் பஞ்சவிஞ் சதிம யேசம்
சொன்னதத் துவங்கள் மூன்றிற் ருேன்றிடு முப்பத்தொன்ரு
முன்னுமவ் வுணர்வுக் கெட்டா வொண்சிவ முரைப்பக் கேணீ

எ. து. எப்பொழுதுஞ் சிவமாயிருக்கிற தத்துவ மொன்றே. நினைத்துச் சொல்லுமிடத்துச் சதாசிவம் ஐந்துபடியாயிருக்கும். மகேஸ்வரம் இருபத்தைந்து பேதத்தையுடையதாயிருக்கும். இப்படிச் சொல்லப்பட்ட தத்துவங்கள் மூன்றில் சிவமொன்றும் சதாசிவமைந்தும் மகேஸ்வரமிருபத்தைந்தும் ஆகத் தத்துவங்கள் முப்பத் தொன்ரும். இனிவாக்குக்கும் மனசுக்கு மெட்டாத சுவரூபத்தையுடைய சிவத்தைச் சொல்லக்கேளென்றவாறு.(4)

“ இப்படி யிருப்ப தொன்றென் றியம்புவ தொன்ற தின்றி
யொப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந் துணர்வா யென்றுந்
தப்பில்பே ரின்ப மாகிச் சந்ததம் விளங்கி யெங்கும்
அப்படி யிருப்ப தொன்றங் ககற்கமாஞ் சிவம தன்றே ”

எ. து. ஏதுதிருட்டாந்தங்களால் இப்படி யிருக்குமென்று சொல்லவும் படாதேயறிவைக் கடந்தெப்போதுந் தன்னறிவாய் அனந்தரூபமாய்ச் சந்ததம் விளங்கி ஒருவராலும் தாகிக்கப்படாதே யிருப்பது சிவமென்றவாறு. (5)

தத்துவ மனைத்துஞ் சாரான் சைதனன் சாந்தன் சுத்தன்
மத்தமா மலாதி பாசம் மயக்குருன் வடிவொன் றில்லான்
நித்தனு யேக னுகி நிரவய னுய னுதி
முத்தனுய் முத்தி நல்கும் முழுமுதல் சிவம தொன்றே

எ.து சிவாகதியாதி யவனிபரியந்தமான முப்பத்தாறு தத்துவங்களாலுந் தன்னைப் பெந்திக்கவும்படாதே சைதன்னியமான சாந்தனுமாய்ச் சுத்தனுமாய், மத்தனுமாயிருந்துள்ள மலமாயாதி பாசங்களாலும் மயக்கவும் படாதே தனக்கொரு சொரூபமுமின்றி ஆதியந்த சூனியனுமாய்க் கரசரணாதியவயவங்களுமின்றி மெய்யினன நாளிலே முத்தனென்றறியவொண்ணாதே எப்பொழுதும் முத்தனுயிருந்து பக்தர்களுக்கு முத்தியைக் கொடுப்பவனுமாய் எல்லாத்துக்குந் தானொரு முதலாயிருப்பது சிவமென்றவாறு. (7)

மெய்ம்மொழிச் சரிதை–உ

(ஆசிரியர்)

தத்துவராயர் தொகுத்த சிவப்பிரகாசம் பெருந் திரட்டில், மெய்ம் மொழி–மெய்ம் மொழிச் சரிதை என்ற பெயரமைந்த ஒரு நூலிலிருந்து 120 பாடல்கள் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. இப்படியொரு நூல் உண்மையாகவே உண்டா என்பது தெரியவே வழியில்லாதிருந்தது. அன்பர் வித்துவானவர்கள் எழுதியுள்ள குறிப்பினல் இந்நூல் பற்றிய செய்திகள் பல தெரிய வருகின்றன. அவர்களிடமுள்ள ஏட்டைப் பிரதி செய்து அச்சிடும் முயற்சியைச் சைவர்கள் மேற்கொள்வது மிகவும் அவசியம்.

இளங்காரிகுடி மெய்ம்மொழித் தேவர் என்பவர் செய்த இந்நூல் பற்றிய செய்திகளுள் இரண்டு சிறப்பானவை; ஒன்று இது உரையுடன் கூடிய நூல் என்பது; மற்றது இது பரபக்கம் சுபக்கம் என இரு பிரிவுகளாயுள்ளது என்பது. உரை ஆசாரியராலேயே செய்யப்பெற்றதா அல்லது அவருடைய மாணக்கரால் செய்யப்பெற்றதா என்பது திட்டமாய்ச் சொல்ல இயலவில்லை.

பரபக்கம் சுபக்கம் என்ற அமைப்பு நமக்குச் சிவஞான சித்தியாரை நினைவூட்டாமலிராது. சித்தியாருக்குப்

பின் வந்தது இந்நூல் என்று கருதுவது பொருத்த மாகும்.

இதன் பரபக்கத்தில் 124 செய்யுட்கள் இருந்தன. ஏடு சிதிலமானபடியால், 82 பாடல்கள் சிதைந்து, இன்று 42 பாடல்களே உள்ளன. சுபக்கத்தில் மொத்தம் பாடல் கள் 362. இவற்றுள் சிதைவு இல்லை, பெருந்திரட்டில் பர பக்கம் 14 பாட்டும், சுபக்கம் 103 பாட்டும் ஆக 120 பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. சில பாடல்களைத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் தம் உரைகளில் எடுத்துக் காட்டுகிறார். பெருந்திரட்டிலிருந்தே அவர் பாடல்களை எடுத்திருக்கிறார் என்று கருதத் தோன்று கிறது.

நூலானது மெய்ம்மொழி–மெய்ம் மொழிச் சரிதை என்ற இரு பெயர்களாலும் வழங்கும் போலும்; இரு பெயர்களும் திரட்டில் வருகின்றன. அன்றியும் நடராஜ நிலையம் என்ற தலைப்பில் வரத்தக்க சில பாடல்கள் திரட் டில் இச்சரிதை என்று தவறாக அச்சிடப்பட்டிருப்பதாக வும் தெரிகிறது.

இந்நூல், சித்தியாருக்குப் பின் வந்தது, தத்துவ ராய ருக்கு முன் வந்தது என்ற குறிப்புகளால் இதன் காலம் கி. பி 1400 என்று வரையறை செய்தல் பொருந்தும்.

இதன் சுபக்கப் பகுதி 369 செய்யுள் கொண்டது என்ற குறிப்பு மிக்க பொருளுடையது. சிவஞான சித்தி யார் சுபக்கம் 317 திருவிருத்தங்களுடையது; தத்துவப் பிரகாசம் (கி. பி. 1350) 337 திருவிருத்தங்கள் உடையது. சிவார்ச்சனா போதம் என்ற ஒரு சிறப்பான சைவ சித் தாந்த சாத்திர நூல் இருந்ததென்றும் அது 300க்கு மேற் பட்ட பாடல்களைக் கொண்டிருக்குமென்றும், சில பாடல் கள் தெரிய வருகின்றனவேயன்றி நூல் முழுமையும் கிடைக்கவில்லை என்றும் சித்தாந்தம் இதழில் (1961 ஜூன்) முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். அந்நூலுக்குரிய கால மும் 1350 ஆகலாம். இந்த வரிசையில் காலத்தால் சற் றுப் பின் வந்த நூலாகிய மெய்ம்மொழிச் சரிதையும்

சிறப்பாய்க் கருதத் தக்கது. இதுவும் சைவ சமய உண்மைகளை விரிவாய் எடுத்துப் பேசுவதாகும்.

இந்நூல் முழுமையும் கிடைத்து நன்முறையில் பரிசோதித்து அச்சானல்தான் இது பற்றி விளக்கம் கூற இயலும். ஆசிரியர் பற்றிய குறிப்புக்கள் அப்போது தெளிவாதலும் கூடும். பொதுவாக சைவசித்தாந்த மரபில் சாத்திர நூல் செய்தார் அனைவரும் உமாபதி சிவாசாரியாருக்குப் பின் வந்த ஆசாரியர் வழியில் உபதேசம் பெற்ற துறவிகளாகவே இருந்திருக்கிருர்கள். மெய்ம்மொழித் தேவர் பற்றி அத்தகைய தொடர்பு எதுவும் தெரியவில்லை. எனினும், தேவர் என்றமையால் இவரும் துறவி என்றே எண்ணத் தோன்றுகிறது.

பெருந்திரட்டில் தொகுக்கப் பெற்றுள்ள மெய்ம்மொழிச் சரிதைப் பாடல்கள் யாவும் அறுசீர்விருத்தங்களே. கொல்லாமை, அட்டமாசித்தி, அட்டாங்க யோகம் போன்றன விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளன. நூலின் நடை சித்தாந்த சாத்திரம் போன்ற சிறப்பான நடையன்று; அன்றிப் பின் வந்த பிற வேதாந்த நூல்கள் போன்ற இலக்கணம் பிறழ்ந்த நடையுமன்று. நூலில் பயிலும் பரிபாஷைச் சொற்களும் முழுமையும் சித்தாந்த மரபுக்குரியனவல்ல. வேதாந்த மரபுக்குரிய சொற்களும் நிரம்பக் காணப்படுகின்றன. எனவே இந்நூலாசிரியர் ஓரளவு சித்தாந்தம் கற்றவராய், வேதாந்தமும் உணர்ந்து நூல் செய்தார் என்று மேலெழுந்தவாரியாகக் குறிப்பிடலாம்.

பின்வந்த வேதாந்தத் திரட்டுக்களான பல சாத்திரத் திரட்டு போன்றன பெருந்திரட்டிலிருந்து இந்நூற் பாடல்களைத் தொகுத்துக்கொண்டனபோலும்.

ஒளி நெறி

மா. ப. தியாகராஜன் B. A.

"ஓரால் நீழல் ஒண்கழலிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டமூன்றுகக் கோட்டினை"

என்பது திருஞானசம்பந்தர் பாடியுள்ளது. திருவீழிமி ழலைப்பதிகத்தில் வருவது பின்வரும் பாடல்:

ஒருக்கிய உணர்வினேடொளிநெறி செலுமவர்
அரக்கன்நன் மணிமுடி யொருபதும் இருபது
கரக்கனல் நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்குனல் மிழலையை நினையவல் லவரே.

திருவீழிமிழலையை நினையவல்லவர்கள் ஒளிநெறி செலுமவர் ஆவர் என்ற குறிப்புக் காண்கிருேம். இவ் வொளிநெறி யைப்பற்றிச் சித்தர் நூல்களில் விரிவாகக் காணலாம். சட்டமுனி பாடிய பாடல்கள் முழுவதும் கிடைக்கவில்லை. சித்தர் சபையில் அவை அழிக்கப்பட்டதென்று "சட்டமுனி நூல் கிழித்த விபரம் காகபுஜண்டர் காவியம் பக்கம் 70-ல் குறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அப்பாடல்கள் வெளிப் படையாக இந்நெறியை விளக்கியிருந்தமையால் கிழிக்கப் பட்டன என்று கூறப்படுகிறது. நால்வர் பெருமக்கள் பாடிய பாடல்கள் பல செல்லரித்துப் போயின காரணம் "இக்காலத்திற்கு வேண்டிய அளவின் போதுமான பாடல் களிருக்கின்றன"; என்று இறைவனே கூறி அவைகளைக் கண்டெடுத்த அரசனைத் தேற்றியதாகக் கூறப்படுகிறது. இராமலிங்க வள்ளலார் ஒருவாறு அந்நெறியை உலகுக்கு விளக்க வேண்டுமென்று முயன்றனர். அவரைப் பின் பற்றி அவர்கண்ட அனுபவத்தை ஒரு சிலரேனும் பெற அவர் காலத்தில் முயற்சி செய்திருப்பார்களேயானுல் ஒளி நெறி உறவினரை ஒன்று கூட்டிச் சுத்த சன்மார்க்க சங் கத்தை அன்றே உருவாக்கியிருக்கும். எனினும் அவரை இக்காலத்து மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில் அவருக்கு ஏற்றம் கூறும்வகையில் நால்வர் பெருமக்கள் தோளில் ஏற்றி அவர்கள் நிலைநாட்டிய சைவ சமயத்தையே குறுகிய நோக்கமுடைய சமயமென்று கருதுகின்றனர்,

ஆஸ்திகத்தின் வாயிலாக நாத்திகத்தைப் பரப்பும் வழிகளில் இதுவுமொன்ருக முடியும்.

புராதனமாக உலக முழுவதும் சிவலிங்க வழிபாடு இருந்ததென்பதை ஆராய்ச்சியாளர்கள் காட்டியுள்ளார்கள். அந்தநிலை மாறி இப்போது ''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'' என்று வேண்டுகின்ற நிலை வந்துள்ளது. அந்த நீதிபோய் வேறு நீதி வரவெண்டுமென்று பாடுபடுகின்ற நிலையும் வந்திருக்கிறதென்பதை உணர மக்கள் வருந்தவேண்டும். அருஉருவத்திருமேனியெனக் கருதப்படும் சிவலிங்கத்தை உற்று நோக்குவோமாயின் நம் சிரசின் ஐம்பொறிகள் சார்பற்ற அகக்கண்வழி அறிவுபெறும் நிலையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. பொறிகளின் வழி அறிவு செல்லுமாயின் புறப் பொருள்களை அறியும் தன்மை உண்டாகிறது. புலன்கள் காட்டும் அறிவு கட்டுப்பட்ட அறிவேயாகும். அது சிற்றறிவு எனப்படும். பூதாகாசம் எப்படிச் சூரிய ஒளிக்கிரணங்களுடன் கலப்பாக இருந்து பொருள்களின்வழி அக்கிரணங்களை வெளிப்படுத்தி நம் கட்புலன் காண உதவுகிறதோ அதேபோல் சிதாகாசம் அறிவினுடன் கலப்பாக நின்று ஐம்புலன் வழிப் போந்து பொருள்களை அந்த அந்தப் பொறிகளின் ஆற்றலுக்கேற்ப உணர்த்துகிறது. கட்புலன் உருவ அறிவை மட்டும் உணரும். செவி ஒலி அறிவை மட்டும் பெறும். அறிவின் வண்ணமாகிய சிதாகாசத்தை அகக்கண்வழி நோக்கிடில் முற்றறிவு பெறமுடியும். இவ்வகக்கண் நெற்றிக்கண்ணென்றும் புருவமத்தியில் உள்ளதென்றும் சித்தர்கள் கூறுவர். சிர முகவட்டத்தில் சிவலிங்கம் நற்சுடராயெழும் என்று திருமந்திரத்தில் கூறியிருப்பதைக் காணலாம்.

நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்
நற்சுட ராயெழு நல்லதென்ருளே

சைவ பரமாசாரியர்களாக விளங்கிய நால்வர்கள் இந்த ஒளிநெறியைப் பற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டிருந்த போதிலும் சிவபெருமான் சோதிவடிவினனுய் விளங்கக் கூடியவனென்று போற்றியிருப்பினும் அந்நெறிக்கு முக்

கியத்துவம் கொடுக்காமல் சிவபெருமானை உருவ வழிபாட்டில் வழிபடுதலால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் சிறப்பையும் பாராட்டிப் பாடிப் போந்தனர். எனவே அவர்கள் காட்டிய சைவ நெறி உலகமக்கள் எவரும் விரும்பி வழி படக் கூடிய நிலையில் இல்லையென்றும், சாகாக்கலையாகிய ஒன்றைக் காட்டவில்லையென்றும், பொது நெறியாக அமையவில்லையென்றும், பொய்யாக மதிக்கும் உடலை மெய் யாக விளங்க வைக்கும் உண்மை நெறியே ஒளி நெறியே, சித்தர்கள் காட்டிய நெறியே சமரசமாக உலகம் போற்றக் கூடியதென்று கூறுவர். அப்பர் சுவாமிகள் இந்தப் பொய்யான உடல் பொசுக்கப்படாமல் நீற்றறையில் ஏழுநாள் அன்ன ஆகாரமின்றி இன்புற்றிருந்தாரென்பதை நோக்குங்கால் அவருடைய கலையை என்னென்பது? அப்படிப்பட்ட யோக சித்தியை எவரேனும் அவருக்கு முன்னே பின்னே கூறியிருக்கின்றார்களா? திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பொசுக்கப்பட்ட அங்கம்பூம்பாவையின் உடலை உருவாக்கித் தந்தாரெனின் அப்படிப்பட்ட சித்து விளையாடி யவர்கள் அவருக்கு முன்னே பின்னே சித்தர்களெவரேனும் இருந்த வர்லாறு கண்டிலோம். அந்தக்கலை சாகாகக் கலையைவிட மேம்பட்டதன்றோ? அதேபோல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலை விழுங்கிய பாலனுடைய அழிந்து போன உடலை உருவாக்கிக் கொடுத்தாரன்றோ? அது எந்த சித்தின்பால் படும்? இவ்வாறு ஒளிநெறிக்கும் சைவ நெறிக்கும் உள்ள வேற்றுமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது நால்வர் காட்டிய நெறியில் தனிப்பட்ட பெருமையும் நுண்ணிய தத்துவமும் இருக்க வேண்டுமென்பது தோன்று கிறது.

மின்சார சக்தி நீராவிச் சக்தி அருவமானதே. அதை அனுபவிக்கவேண்டுமெனின் அதைஒரு உருவத்தில் புகுத்தி யன்றோ அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஒரு பல்பில் (Bulb=விளக்கு) மின்சாரத்தைச் செலுத்தினால் ஒளியைத் தருகின்றது. விசிறியில் புகுத்தினால் காற்று வீசுகிறது. அருவமாயுள்ள சக்தி அனுபவத்திற்கு வரவேண்டுமெனின் உருவத்தாலன்றி அமையாது. இறைவனுடைய அருட்சக்தியை அருவமாகவோ, சோதியாகவோ, ஒளியாகவோ, வெளியாகவோ காணுதல் ஒரு தனிப்பட்ட ஆற்றலெனினும் அச்

சத்தியை மக்கள் ஆர்வத்திற்கேற்ப ஒரு உருவத்தில் கொண்டு வந்து அனுபவத்திற்குள்ளாக்கிய பெருமை நால்வர் பெருமக்களுக்கே அமைந்த சிறப்பாகும். இறைவனை அருவத்திருமேனியில் கண்டனுபவித்த பெருமை சித்தர்களைப் போன்ற ஒரு சிலருக்கமைந்துள்ளது. உருவத்திருமேனியில் அச்சக்தியை அடைந்து ஆனந்தமெய்திய பக்தர்கள் பலர். எனினும் அருவத்திலும் உருவத்திலும் கண்டு ஆனந்தித்து அதன் விளைவாகப்பெற்ற அருளாரமுதத்தை அப்படியே மக்களுக்குப் பயன் தருமுறையில் தம் பாடலில் அமைத்துப் பாடியுள்ள பெருமை நால்வர் பெருமக்களுக்கே உண்டு. பழத்தைப் பிழிந்தால் சுவையுள்ள ரசம் பெறுதல் போல அவர்கள் பாடியுள்ள பாடல்களைப் பாடிப்பாடி அருளைப் பெற்றுத் தம் அல்லல்களை மாற்றிக் கொண்ட மக்கள் இன்றுமுளர். இராமலிங்க வள்ளலார், திருவாசகத்தைச் சுவைத்துச் சுவைத்துப் பாடியதுபோல் நாம் அனுபவிக்க முடிகிறதா? அருட்சுவை அவர்கள் பாடலிலமைந்துள்ளன என்பதை விளக்க இராமலிங்க சுவாமிகள் பாடல்களே போதுமான சான்றாகும். உயிரினங்களும் அருவமாகவே இருந்துவிடில் இறை அனுபவம் பெற முடியாது. அனுபவமென்பது அதனை அடைவிக்கிறதற்குரிய வாயிலாகிய உருவத்தாலன்றி அமையாது. அதுபற்றியே உயிரினங்களுக்கு உடலமைக்கப்பட்டுப் பிறப்பளிக்கப்படுகிறது. இறைவனை குனித்த புருவத்துடன் கொவ்வைச் செவ்வாயுடன் பவளம் போல் மேனியுடனே காணப்பெற்று இனித்தமுடைய அவனுடைய பொற்பாதத்தை அனுபவிக்க வேண்டுமெனின் பிறவிவேண்டும்; மனித்தப் பிறவியும் வேண்டும் அருவ நிலையில் தேசுடைய அ·ர உலகில், அனுபவமில்லையென்றல்லவோ சுந்தரர் அனிந்திதி கமலினியுடன் பூலோகம் வந்து பிறப்பெய்தினர். சுந்தரர்அவ்வுருவத்தோடே வெள்ளையானையின்மீது கைலாயம் சென்று சிவனை உருவத்தில் கண்டனர். சிவனை நாத உருவில் கேட்டுக்களித்த சேரமான் பெருமான் அவர்பின் குதிரைமீது சென்று சிவன் முன்னிலையில் ஞானஉலா அரங்கேற்றினர். அவர்கள் கண்ட இப்படிப்பட்ட கலைகளை என்னென்பது! அப்படிப்பட்ட கலையன்றோ உலகத்தின் அவல நிலையை மாற்ற வல்ல சைவக் கலையாகும். இதையே சம்பந்தரும் கூறுகிறார்.

வெற்றரை யுழல்வார் துவராடைய வேடத்தர் அவர்கள்உரை
கொள்ளன்மின்
மற்றவருலகில் அவலம் மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்து சிற்றம்பலம் காதலார்கழற்
சேவடி கைதொழ
உற்றவருலகின் உறுதி கொள்ளவல்லவரே.

வேலை பார்க்க அலுவலகம் செல்கிறோம். வேலை முடிந்த பின்னும் வீட்டிற்கு வராமல் அங்கேயே இருக்க எண்ணுவது அறியாமையாகும்; அதுபோல இப்பிறவியை நீடிக்கச் செய்ய விரும்புவதுமாகும்.

''சாகாக் கலைநன்மை சார்ந்தபிறப் பொன்றில்
போகா மலமருளால் போக்குவித்தே—வாகாத்
திருவடிக்கீழ் என்றும் திகழ்ந்துபே ரின்பம்
மருவிமிக வாழ்தல் மதி''

மாற்றத்திற்குட்பட்ட பொருள்களைச் சார்ந்து வாழ்வது என்றும் அல்லலுக்குட்பட்டதென மதித்து, இம்மாறுதலுக் கெல்லாம் இடங்கொடுத்து தான் மாறாதிருக்கும் இறை பொருளைச் சார்வதே இன்பம் என ஓர்ந்திடில் அந்த இன்ப அனுபவம் பெறுவதற்குறு துணையாக எடுத்த மானிடப் பிறவி மாய்ந்து போகாவண்ணம் அதை நிலைத்திருக்கச் செய்வதையே சித்தர்களும் விரும்பினர். நிலையாப் பொருள் களுடன் நீடித்திருந்து அல்லற்படுவதை எவரும் விரும்பார். இன்பம் சாகாமல் நிலைத்து நிற்கப் போதிக்கும் கலையே சாகாக் கலையாகும். சைவசித்தாந்தத்தின் அடிப்படைத்தத் துவம் எதுவும் சாவதில்லை யென்பது. சாவது நிலை மாறு வதேயாகும். கட்டுப்பட்ட பசுத்தன்மையை விடுத்து சுதந் திர பதித்தன்மை எய்துவதே சைவ சமயத்தின் கொள்கை யாகும். அதுவே சாகாக்கலையுமாகும்.

பிராசாத யோகத்தில் பிராசாத மந்திரத்தை அறிவால் கணித்துத் துவாத சாந்தம் வரையிலே பல ஒளிகளைக் கடந்து சென்று சிவசாயுஜ்யம் அடைகின்ற சைவசித்தாந்த யோக மார்க்கத்தையே ஒளிநெறி என்னும் பெயரால் நம் முன்னோர்கள் வழங்கி வந்தார்கள். யோக நெறியிலே அடையும் சிவயோகமிது. ஞான நெறியிலே அடையும் சிவயோகம் வேறு உண்டு. எல்லாவற்றையுங் குறித்து

''சிவயோகமே யோகம் அல்லாத யோகம் அவயோகமே யென்றறி'' என்று திருக்களிற்றுப்படியாரில் கூறப்படுகிறது. தாயுமானவரும் ''யோகியருக்கே ஞானம் ஒழுங்காம் பராபரமே''; என்று கூறுகிறுர்.

திருவீழிமிழலையில் திருஞான சம்பந்த சுவாமிகள் பாடியருளியுள்ள பின்வரும் பாடலில் இவ்வொளி நெறி சிவபெருமாலுலளிக்கப்பட்டதெனும் குறிப்பைக் காணலாம்.

'' ஏரிசையும் வடவாலின் கிழிருந்தங் கிரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித்தோன் நின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னுளும் பயின்றேதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும் மிழலையாமே.',

மேலும் திருவீழிமிழலையை நினைய வல்லவர் அடையக் கூடிய நலன்களை ஒவ்வொன்ருகச் சொல்லிவரும் பதிகத்தில் ''ஒருங்கிய உணர்வினெடொளிநெறி செலுமவர்'' என்று திருஞானசம்பந்த சுவாமிகளருளிருப்பதைக் காணலாம். இதையே அப்பர் சுவாமிகள் பின்வரும் பாடலில் விளங்கக் கூறுகிறுர்.

''நிலைமை சொல்லு நெஞ்சே தவமென் செய்தாய்
கலைகள் ஆய வல்லான் கயிலாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே''

துவாதசாந்தப் பெருவெளியை இங்கு தலையின் மேல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அப்பியாச முறையைத்தக்க குருவினிடம் கேட்டுத் தெளிதல் வேண்டும். புற ஒளியைக் காணக்கண்ணுகிய கருவியும் ஒலியைக் கேட்கச் செவி இந்திரியமும் வெகு தூரம் நடந்து செல்லக்காலும் வன்மையுற்றிருக்க வேண்டுவது போன்று பாரக முற்றும் பரந்து நிற்கும் நுண்ணிய இறைவனை உணரும் கருவியை தூய்மைப் படுத்துவதே தவமாகும். அதுவே யோகமுமாகும். சக்தியின்றி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. ஞான அடைவுக்கேற்ற சக்தியை அடையும் மார்க்கமே ஒளிநெறியும், தவமும், பிராசாத யோகமும் ஆம்.

சிவஞான தீபம்

(ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,)

முன்னுரை

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு எனப் பொதுவாகக் கூறப்படும். ஆயினும் அப்பதினான்கு சாத்திரங்களைத் தழுவிப் பற்பல சிறுசிறு நூல்கள், அவ்வப்போது பல சான்றோர்களால் இயற்றபபட்டுள்ளன. அவைகளிற் சைவசித்தாந்த சாத்திரங்களின் கருத்துக்கள், ஏற்ற பெற்றி சுருக்கியும் விரித்தும் சுவை பெறக் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

அங்ஙனம் சைவசித்தாந்தச் சார்பு நூல்களாகத் தோன்றியுள்ள சிறுசிறு நூல்கள், சற்றேறத்தாழ ஐந்நூற்றுக்கு மேற்பட்டனவாகும் என, முதன் முதலில் தமிழில் "மொழி நூல்" என ஒரு நூல் எழுதிய அறிஞர் திரு. மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள் குறிப்பிடுவர். அத்தகைய சைவ சித்தாந்தச் சார்பு நூல்கள் பலவற்றுள் ஒன்றே சிவஞானதிபம் என்னும் ஒரு சிறு நூல் ஆகும்.

இரேவண சித்தர்

அருட்டிரு. பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்களும் 'சிவஞானதீபம்' என ஒரு நூல் இயற்றியருளினார்கள். அஃது இதனின் வேறாய், உரைநடையில் அமைந்திருப்பதாகும். ஆயின், இதுவோ செய்யுள் வடிவில் இரேவண சித்தர் என்பவரால் இயற்றப்பெற்றுள்ளது. இவ்வாசிரியரே பட்டீச்சுரம், திருவலஞ்சுழி, திருமேற்றளி ஆகிய சிவதலங்களுக்குத் தலபுராணங்களும் பாடியிருக்கின்றார். 'அகராதி நிகண்டு' என ஒரு நூலும் இவராற் பாடப் பெற்றிருக்கின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் இந் நிகண்டினை அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர். இவர் தொண்டை மண்டலம் புலியூர்க் கோட்டத்துப் புலியூரில், அதாவது நம் சென்னைக் கோடம்பாக்கம் பகுதியில் வாழ்ந்திருந்தவர் என்பது அறிந்து மகிழ்தற் குரியது

சிதம்பர சுவாமிகள்

இத்தகைய சிறந்த ஆசிரியர் இயற்றியிருப்பதே "சிவஞான தீபம்" என்னும் இந்நூலின் பெருமையினை விளக்கப் போதியதாகும். எனினும் இந்நூலுக்கு மற்றொரு சிறந்த பெருமையும் உண்டு. திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அவர்களைப் பற்றி நாம் நன்கு அறிவோம். தமிழறிந்த அறிஞர்கள் அனைவரும் "திருப்போரூர்ச் சந்நிதி முறை"யின் சிறப்பினை உணர்வர். அதனைப் பாடியருளிய சிறந்த சிவஞானானுபூதிச் செல்வர் ஆகிய சிதம்பர சுவாமிகள், இந்நூலினைப் பெரிதும் மதித்துப் போற்றியிருக்கின்றார்கள். கோவைப் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலை மறுத்தல், அவிரோத உந்தியார் என்னும் நூல்களுக்குத் தாம் வகுத்தருளிய உரைகளில், சிதம்பர சுவாமிகள் சிவஞான தீபச் செய்யுட்கள் பலவற்றை ஆங்காங்கே மேற்கோளாக எடுத்துக் காட்டியருள்கின்றார்கள். இவ்வாற்றால் சிவஞானதீபம் என்னும் இந்நூலின் சிறப்பினை யாவரும் தெளியலாம்.

நூற்பொருட் கருத்துக்கள்

இந்நூல் பாயிரம், பொது இயல்பு. உண்மை இயல்பு என்னும் முப்பகுதிகளையுடையதாய், 174 செய்யுட்களால் அமைந்துள்ளது. தீக்கைமுறை, சைவசீலம், திருநீறு, யாக்கைநிலை, தசவாயுக்கள், ஆதாரயோகம், நவந்தரு பேதம், பதிபசுபாச இலக்கணங்கள், தத்துவங்களின் இயல்புகள், தத்துவத்தோற்ற ஒழுக்கங்கள், பஞ்ச கலைகள், பஞ்சாக்கரநிலை, சீவன் முத்தர் இயல்பு, சத்திநிபாதம், சிவபூசைப்பலன் முதலிய பல பொருள்களைக் குறித்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சுவைமிக விளக்கிச் செல்கின்றது இந்நூல் :

" எவ்வுயிரும் பராபரன்சந்நிதிய தாகும்;
இலங்கும்உயிர் உடல்அனைத்தும் ஈசன கோயில் "......

எனப் பலரும் பெருக எடுத்துக் கூறும் வரிகள், இந்நூலில் வருவனவேயாகும். இவ்வாறு பல சிறந்த பாடல்கள் இதன்கண் அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டொன்றை மட்டும் ஈண்டுக் காண்டல் அமையும்.

(1) சிவநாமத்தை ஒரு முறை ஓதித் திருநீறு அணிந்தாலே, நம் தீவினைகள் எல்லாம் நீங்கும். கொலைப்பாதகனின் கையில் இருக்கும் கத்தியேயானாலும், பரிசனவேதியைப் பரித்தால் பொன்னாகாமல் இருக்குமோ? ஒரு மரத்தில் பறவைகள் எண்ணற்றனவாகத் திரண்டு அமர்ந்திருப்பினும், ஒரு சிறு கல்லை எடுத்து வீசிய அளவில், அவையனைத்தும் பறந்து ஓடி மறையும் அன்றோ! அதுபோலவே சிவநாமத்தை ஒருமுறை ஓதித் திருநீறு, அணிந்தால், தம் பாவங்கள் நீங்கி ஒழிதல் திண்ணம்.

நிரந்தமன வாக்குடலால் அணைந்த கன்மம்
நீங்குவதெவ் வாறெனவே இயம்ப வேண்டா!
பரந்தகொலைப் பாதகன்கைக் கத்தி யேனும்
பரிசனவே தியைப்பரிக்கப் பொன்னு மாபோல்,
விரிந்தமரத் தமர்ந்தபல பறவை எல்லாம்
விரைந்தொருகல் எறிந்திடவிட் டேகு மாபோல்,
அரன்திருநா மத்தையுரைத் தொருகால் வெண்ணீறு
அணிந்திடவெவ் வினையனைத்தும் அகன்று போமே.

(2) நமக்கு 10 வயதில் இளம் பருவம் அகன்று விடும்; 20 வயதில் உடல் வளர்ச்சி தடைப்படும்; 30 வயதில் அழகு குன்றும்; 40 வயதில் அறிவு தளரும்; 50 வயதில் பலம் குறையும்; 60 வயதில் தாதுவற்றும்; 70 வயதில் கண் பார்வை கெடும்; 80 வயதில் காது கேட்காது, 90 வயதில் வாசனை தெரியாது; 100 வயதில் உயிர் உடலை விட்டு நீங்கி விடும். ஆதலால் நாம் நம் வாணாளை வீணாளாக்கி விடாமல். நல்ல தவவொழுக்கங்களைக் காலமுள்ள பொழுதே கடைப்பிடிக்கத் தலைப்படுதல் நலம்.

"இட்டமிகும் இளமைநலம் ஈரைந்தாண் டதனில்;
இருபதி ல் வளர்ச்சியும்;முப் பதுவருடத் தழகு;
உட்டகைய மேதையும்நாற் பதுவருடத்து; உடலில
ஒண்பலமும் ஐம்பதினில்; அறுபதினில் தாதும்;
திட்டியும்அங்கு எழுபதினில்; எண்பதினிற் செவியும்;
திகழ்மணமும் தொண்ணூறில்; சிவனும்நூறு அளவில்
விட்டகலும்; விரவியுதித் தொடுங்குவதென றுணர்ந்தோர்
வீணுட்பட் டொழியாமல் விருமபுவர் நற் றவமே".

(3) நாம் சுவாசிக்கும் பிராணவாயுவானது அசைவற்ற சமாதிநிலையில் 12, நடக்கையில் 16, ஓடுகையில்

30, தூங்குகையில் 40, புணர்ச்சிக் காலத்தில் 64 விரல் களின் அளவு நீண்டு இயங்கி நிற்கும். இங்ஙனம் பல வகைகளில் நம் சுவாசம் வீணாகி வாழ்நாள் குன்றிப் போகாமல், நாம் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். இடைகலை பிங்கலை என்ற இரண்டிலும் சமமாகச் சுவாசம் இயங்குமாறு செய்ய நாம் பயின்று கொண்டால், நமக்குக் குண்டலியோகம் கைகூடி, நலம்பல நல்கும்.

"நயந்துசமா தியில் இயங்கும் பன்னிரண்டங் குலிதான்;
நடந்திடில்ஈ ரெட்டுவிரல்; உயங்கியிடும் நவையார்
துயங்கிவிரைந்து ஓடிடில்ஐ யாறுவிரல் இயங்கும்;
துயிலுறில்எண் ஐந்துவிரற் கிடையுடல்விட் டகலும்;
தயங்கியவேல் விழியாரை முயங்கியிடும் பொழுதில்
தரியாதெண் ணெண்விரலின் அளவுயிர்விட் டியங்கும்;
பயங்கொளிடை பிங்கலைகள் ஒருவழிபட் டிடவே
பரிந்தநற்குண் டலியோகம் பொருந்திடும்அங் குறவே."

(4) இறைவன் தன் திருக்கரத்தில் ஏந்தியுள்ள தமருகம் ஆகிய உடுக்கையினால் உலக உயிர்கட்கு இன்பம் உறும்படி செய்வது சிருட்டி; அபய கரத்தினால் உயிர்களின் இருவினைகளையும் துலைபோல ஒப்பாக்குவது திதி; நெருப்பு ஏந்திய கையினாற் சுழன்றுழலுகின்ற கருவி கரணங்களை யெல்லாம் நீக்கிப் பிறவியை அறுப்பது சங்காரம்; ஊன்றிய வலப்பக்கத்துத் திருவடியினால் உயிர்களை இன்ப துன்ப நுகர்ச்சிகளில் அழுந்துமாறு செய்தல் திரோபவம்; எடுத்த இடப்பக்கத் திருவடியினால் உயிர்களை இருள் நிறைந்த கேவலசகல நிலைகளின்று எடுத்துச் சுத்த நிலையில் உய்த்து அருளினால் முத்தியடைவிப்பது அனுக்கிரகம் இவ்வைந்து தொழில்களையும் புரிவதுதான், இறைவன் பொதுவில் (அம்பலத்தில்) இயற்றும் நடனத்தின் நோக்கமாகும்.

"ஊன்றுதம ருகக்கரத்தால் உலகுயிர்கட் கின்பம்
உறுவிக்கும் அதுசிருட்டி: உகந்துஅபய கரத்தால்
தோன்றும்இரு வினைதுலையொப்ப ஆக்குமது திதியாம்;
சோதியழல் திருக்கரத்தாற் சுழல்கரணம் அறுத்தே
ஏன்றபவம் அறுப்பதுசங் காரம்;வலப் பதத்தால்
இன்பதுன்பத் தழுத்தல்திரோப வம்;எடுத்த பதத்தால்
ஆன்றிருள் கேவலசகலத்து எடுத்தருளால் முத்தி
அளிப்பது அனுக்கிரகம்;இவை அரன்பொது நாடகமே."

(5) இரசகுளிகையிற் பொன்னும், ஞாயிற்றி னொளியிற் கண்ணொளியும், காந்தத்தின்கண் இரும்பும், பெத்தநிலையில் ஆணவமலத்தினுள் உயிரும், விறகினிடத்தில் நெருப்பும், உப்பளத்தில் துரும்பும், விதையின்கண் மரமும் அடங்கிக் கிடத்தல் போலவே, முத்தி நிலையில் ஆன்மாவானது அரன் அருளில் அடங்கி நிற்கும்.

"பொன் அதனை அடக்கியிடும் குளிகை போலும்,
பொருவில்விழி யொளியடக்கும் இரவி போலும்,
உன்னும்இரும் பினையடக்கும் காந்தம் போலும்,
உயிரை அடக் கிடும்மூல மலமே போலும்,
வன்னியினை அடக்கிடும்இந் தனமே போலும்,
மருவுதுரும்பு அடங்கியிடும் உப்பளமே போலும்,
அன்னபழு மரம்அடக்கும் வித்தே போலும்,
அரன்அருளில் அடங்கும்உயிர் அறிவு தானே."

(6) ஆன்மாவிடத்தில் இறைவனின் திருவருட்சக்தி பதிதலைச் சத்திநிபாதம் என்பர். இது நான்கு வகைப்படும். அவை முறையே மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்பனவாம். இந்நால்வகைப் பக்குவநிலைகளும் முறையே வாழைத்தண்டிலும், பச்சை விறகிலும், உலர்ந்த விறகிலும், கரியிலும் நெருப்புப் பிடித்தலைப் போன்ற வேறுபாடுடையனவாகும். மேலும், இறைவன் ஒருவன் உண்டு என உணர்ந்து அதனை அடைய விரும்பி முயலும் ஆரம்ப நிலை மந்தம்; புளியம் பழமும் அதன் ஓடும்போல உடலிற் பற்றற்று நிற்றல் மந்ததரம்; உலகினை முற்றும் துறந்து இறைவனை அடைதற் பொருட்டுத் தவவொழுக்கந் தலைப்படுதல் தீவிரம்; ஒரு ஞானாசிரியனைப் புகலடைந்து, அவன்றன் திருவடிகளையே பற்றுக் கோடாகக்கொண்டு, அவனுக்குப் பணிசெய்து ஒழுகுதல் தீவிரதம்.

"திருந்தியசத் திநிபாதம் நால்வகையாம்; மந்தம்
திகழ்மந்த தரம் தீவிரம் தீவிரதரம்
பரிந்திதனுக்கு உறும்உவமை இருங்கதலிக் குற்றி
பச்சைவிறகு உலர்விறகு கரியில்எரி பொதிதல்;
புரிந்திவர்பக் குவம்பொருள்உண் டெனஅதற்குப்
பொருந்தல்;
புளியந்தோ லும்பழமும் போல்உடற்பற் றறுகை;
அரந்தையுல கினைமுழுதும் துறந்துபொருள் தேடல்;
அருட்குரவன் அடியிணைசேர்ந்தவன்பணிசெய்
திடலே"

சிவஞானதீபம் என்னும் இந்நூலில் இன்னோரன்னைய செய்யுட்கள் பல வருகின்றன. அவற்றுள் இங்கு மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க செய்யுட்கள் இரண்டுள. அவற்றில் சிறந்த சைவ சித்தாந்த நுண்பொருட் கருத்து ஒன்று நன்கினிது விளக்கப் பெற்றிருக்கின்றது. சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய உண்மை விளக்கம் என்னும் நூல் "முத்திநிலையிலும் பதிபசுபாசங்கள் ஆகிய முப்பொருள்களும் உண்டு. முத்தியின்கண் இறைவனின் இன்பத்தை அநுபவிப்பது உயிராகிய பசு. பசுக்கள் ஆகிய உயிர்களுக்கு முத்தியின்பத்தை வழங்குபவன் பதியாகிய இறைவன். பாசம் ஆகிய ஆணவமலம், பசுக்களுக்கு முத்தியின்பத்தை விளைவித்து நிற்கும்", என்னும் கருத்து அமைய,

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள் !
சுத்த அநு போகத்தைத் துய்த்தல்அணு;—மெத்தவே
இன்பம் கொடுத்தல்இறை; இத்தைவிளை வித்தல்மலம் ;
அன்புடனே கண்டுகொள்அப் பா !

எனச் சைவ சித்தாந்தச் சுத்தாத்துவித முத்திநிலை பற்றிக் கூறுகின்றது. இக்கருத்தினைப் பிறநூல்கள் இங்ஙனம் மிகவும் தெளிவுற எடுத்து விளக்குகின்றில. அதனால் அறிஞர்களிடையே மேற்குறித்த உண்மை விளக்கச் செய்யுள், பெருமைபக்கம் விளைவித்து வருகின்றது.

ஆனால், சிவஞானதீபம் என்னும் இந்நூல் மேற் குறித்த உண்மை விளக்கச் செய்யுளின் பொருளையே மிகவும் தெளிவுற இரண்டு பாடல்களால் பின்வருமாறு விரித்துரைத்து அழகுற விளக்குகின்றது.

(1) முத்தி நிலையிலும்கூட ஆன்மா, ஈசன், ஆணவ மலம் என்னும் மூன்று முதற் பொருள்களும் அழியாமல் இருக்கும் என்று ஆகமங்கள் கூறும். அதனைக் கூறுகின்றோம், நீ கேட்பாயாக! நித்தியமாகிய பரபோகத்தினை அனுபவிப்பது ஆன்மா. அந்தப் பரபோகத்தினை ஆன்மாக் களுக்கு அளிப்பவன் ஈசன். ஆன்மாக்களுக்கு அப் பர போகத்தினை மிகவும் விளையும்படி செய்து நிற்பது ஆணவமலம். இவ்வாற்றால் இம்மூன்று பொருள்களும் அநாதிநித்தியப் பொருள்கள் என்பது பெறப்படும்.

(2) அற்றாயினும், 'தீங்கையே பயக்கும் இயல்பிற்றாய் எல்லாக் கேடுகளுக்கும் துயரங்களுக்கும் மூல காரணமாக உள்ள ஆணவமலம், முத்திநிலையில் இன்பத்தை விளைவிக்குமாறு யாங்ஙனம்? துன்பங்களுக்குக் காரணமான மலம் ஒருபோதும் இன்பத்தை விளைவிக்காது' என்று நீ கூறுவாயாயின், அதனைக் குறித்து நான் விளக்கியுரைக்கின்றேன். கேட்பாயாக.

ஆணவமலமானது பெத்த நிலையில் திரோதான சத்தியின் வழிநின்று உயிர்களுக்கு உலகத்தைக் காட்டி மாயா போகங்களில் இன்பம் விளையும்படி செய்து, இறைவனை மறைக்கும்; அதுபோல, முத்தி நிலையில் அருட்சத்தியின் வயப்பட்டு நின்று இறைவனைக் காட்டி சிவபோக நுகர்ச்சியில் இன்பம் மிகும்படி செய்து, உலகத்தை மறைத்து நிற்கும். இங்ஙனம் மலம் உலகத்தை மறைப்பது, ஆன்மாவின் சிவபோகநுகர்ச்சியின் இன்பத்தை மிகுவிப்பதாகின்றது.

"முத்தியினும் மும்முதலும் அழியாது என்றே
மொழிந்திடும் ஆகமம்; அதனைமொழியக் கேள்நீ!
நித்தியமாம் பரபோகம் துய்ப்பது ஆன்மா;
நீடுபர போகம்உயிர்க்கு அளிப்போன் ஈசன்;
சுத்தமலம் இன்பம்மிக விளைக்கும் ஆற்றாற்
சொல்லரிய மும்முதலும் அநாதி யாகும்;
வைத்தமலம் முத்தியின்பம் விளையாது என்னின்,
மற்றதுதான் நின்றநிலை வகுப்பக் கேளே!

"ஆதிதிரோ தானத்தால் பெத்தந் தன்னில்
ஆணவந்தான் மாயாபோ கத்தில் இன்பம்
போதமுற விளைத்து. உயிர்கட்கு உலகம் தோன்றப்
புனிதனருள் தோன்றாமல் மறைக்கு மாபோல்,
சோதியருள் முத்தியினும் சத்தி மாந்திச்
சுகானந்தம் விளைத்துயிர்கட் குயிராய் ஈசன்
பேதமற நின்றுணர்த்தும் உண்மை தோன்றப்
பிரபஞ்சம் தோன்றாமல் மறைக்குங் காணே"

இவ்வாறு சிவஞானதீபம் கூறும் கருத்து, செவ்வியதாய்ப் பொருத்தமுடையதேயாகும் என்னும் உண்மை,

"ஆன்மாவால் அறியற்பாலது சிவம் ஒன்றே. அதுவதுவாய் நின்று அநுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும்

அறிவுழிச் சிவானுபவ விளைவிற் குறைபடுமாகலின், ஏனையதாகிய உலகத்தை அறிதல் முத்திப் பெரும் பயனுக்கு இடையூறேயாம். ஆதலின் உலகத்தை அறியாமையே முத்திப் பெரும்பயனுக்குச் சிறந்த காரணம் என்று உணர்க. இக்கருத்துப் பற்றியே "இன்பங் கொடுத்தல்இறை இத்தை விளைவித்தல் மலம்' என்று உண்மை விளக்கம் ஓதியதென்று தெளிக."

எனச் சிவஞானப் போதப் பேருரையில் ஆறும் சூத்திரத் தின்கண் ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் குறிப்பிட் டருளியிருத்தல் கொண்டும்,

"பாசம், பகலோன் முனரே திமிரம்
நாசம்பெறல்போல், நமயவா லருள்முன்பு
ஆசங்கை இலாது அழியா தழிவுற்று,
ஈசன் தரும்இன்பு எனநின் றிடுமே

எனத் தாம் இயற்றியருளிய "பரிபூரணானந்த போதம்" என்னும் நூலின் செய்யுளுரையின்கண்,

"சூரியன் முன்பு இருள்போல இருந்தும் இராததாய் முத்திநிலையில் ஆணவமலம் இருக்கும்...முத்தி நிலையில் ஆன்மா அறியற்பாலது சிவம் ஒன்றே; அஃது ஏனைய வற்றை அறியாமையே அச்சிவானுவ இன்பத்திற்குச் சிறந்த காரணம் ஆதலின், 'இத்தை விளைவித்தல் மலம்' என்றார்...திசிவம், சூடு ஆன்மா கட்டை மலம்; கட்டை திமயம் ஆதல், ஆணவமலம் இன்பம் விளைவித்தல்..."

என அருட்டிரு. பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் உரை செய்திருத்தல் கொண்டும், உணரப்படும்.

முடிவுரை

இத்தகைய சிறப்பின் மிக்க சிவஞானதீபம் போன்ற சமயத் தமிழ் நூல்கள் பலவற்றையும் நயந்து கற்றுப் பயன்பெற்று மகிழ்வது, தமிழார்வமும் சமயவுணர்வும் உடைய தக்கவர்கள் அனைவருக்கும் உரிய சிறந்த கடமை யாகும்.

இந்த மாத வழிபாட்டில் மதுராந்தகம் செங்குந்தர் பேட்டை அருளாழீச்சுரர் ஆலயத்தில் உழவாரப்பணி தொடக்க விழாவை திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் நடத்திவைத்தார்கள். உழவாரப் படைகளை நம் சமாஜப் பெரியார் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் அன்பளிப்பாய்க் கொடுத்துதவினார்கள். இத்தகைய செயன் முறைத் திட்டங்கள் இக்காலத்திற்கு இன்றியமையாதன கழகத்தவரின் சமயப்பணி இதுபோன்று ஆக்க வேலைகளில் இன்னும் பல்லாற்றானும் சிறப்பதாகுக.

கருமமும் மறுபிறப்பும்

சென்னைப் பல்கலைக் கழகம் உயர்நிலை தத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் ஆகஸ்டு 17, 18, 19 தேதிகளில் "கருமமும் மறுபிறப்பும்" என்ற பொருள் பற்றி ஒரு அரிய கருத்தரங்கு நடைபெற்றது. இந்தியாவில் பல பல்கலைக் கழகங்களிலிருந்து தத்துவப் பேராசிரியர்கள் பங்குகொண்டார்கள். திரு டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அரங்குக்கு முதல்வராக இருந்தார். ஸ்ரீ ஈசுவரானந்தா என்ற ஒருவர் இந்து சமயத்திற்குக் கரும பலத்தால் மறுபிறப்பு வாய்க்கிறது என்ற கூற்று தேவையில்லை யென்று எழுதிய ஒரு நூலை அடிப்படையாகக்கொண்டு விவாதம் நடந்தது. சிலர் விஞ்ஞான!(Biogenesis) ஆராய்ச்சிப்படி மறுபிறப்புக்கும் கரும பலனுக்கும் தொடர்பு இல்லையென வாதாடினார்கள். டாக்டர் வி. ஏ. தேவசேனாபதி, (சென்னை] பேராசிரியர் சி. ராமலிங்கம், [அண்ணாமலை நகர்) டாக்டர் கி. சிவராமன் (காசிப் பல்கலைக் கழகம்) இவர்கள் சைவ சித்தாந்தத்தின் கொள்கையைத் தொட்டுப் பேசினார்கள். ரெவரண்டு இன்னாசி இருதயம் [இலயோலா கல்லூரி) குறிப்பாக ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் சிவஞானபோத சூத்திரத்தில் குறித்துள்ள "போக்கும் வரவும்" இறைவன் ஆணை என்பதை எடுத்துக் காட்டியது மகிழத் தக்கது. வெளியார்கள் இரண்டொருவர் கலந்து கொண்டார்கள். சைவ சிந்தாந்த சமாஜத்திற்குத் தகவல் கிடைக்காமையால் யாவரும் பங்கு கொள்ள இயலவில்லை. அரங்கின் நடவடிக்கைகள் வெளி வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இராவ்பகதூர் திரு. க. அரங்கசாமி முதலியார் 80-ஆம் ஆண்டு நிறைவு விழா

திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களுக்கு 30-8-65 அன்று 80 ஆண்டுகள் நிறைவாயிற்று எனறு அறிகிறோம். இவர் நமது சமாஜத்தைப் போற்றி வளர்த்த பெரியார்களில்

ஒருவர். அரசாங்கத்தில் பெரிய பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்றபின் சமாஜச் செயலாளராக ஏழு ஆண்டுகள் (1946—1953) உடலிலும் உள்ளத்திலும் இளைஞராக வேலை செய்தார். 1961-ல் சமாஜ மாநாடு பழனியம்பதியில் இவருடைய முயற்சியால் சிறப்பாக நடந்தது. 1964-ல் பேரூரில் நடந்த சமாஜ மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினர். தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவ சாத்திரம், தோத்திரம் இவைகளில் பெரும்பான்மை ஓய்வு பெற்ற பின்னரே ஆழ்ந்து படித்து, சங்க இலக்கியங்களைப் பாடம் சொல்லுமளவுக்கும், சிவஞானபோதத்திற்கு எளிய உரை ஒன்று எழுதி வெளியிடும் அளவுக்கும் புலமை பெற்றார். இது ஓய்வு பெற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இவரும் இவர்தம் வாழ்க்கைத் துணைவியாரும் பழனியம்பதியில் சிறந்த சமயத் தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இவர் குடும்பம் ஞானியார் சுவாமிகள் தொடர்பால் சைவ மணம் பூத்து வளர்ந்த குடும்பங்களில் தலைசிறந்த ஒன்று. இவரும் இவர்தம் துணைவியாரும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று சமாஜச் சார்பில் இறைவனை வணங்குகின்றேன். அவர்களுக்கு சமாஜத்தின் வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். (செயலாளர்)

நம் சமாஜப் பேரன்பர் டாக்டர் வ.ஆ தேவசேனபதி அவர்கள் திருமகள் திருவளர் செல்வி உஷாவுக்கும் திருவூர் சந்திரசேகரப் பிள்ளை அவர்கள் திருமகனர் திருவளர் செல்வர் கோபாலகிருஷ்ணனுக்கும் திருவான்மியூர் ஆலயத்தில் 5—9—65 ஞாயிறு காலையில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது எல்லாம்வல்ல பெருமான் திருவருளால் மணமக்கள் எல்லா நற்பேறுகளும் பெற்று இனிதுவாழ அவனருளையே வேண்டி வாழ்த்துகின்றோம்.

நம் சமாஜ முன்னாள் செயலாளர் திரு. மா. ப. தியாகராஜன் அவர்கள் முதல் மகனர் திருவளர் செல்வர் சிவானந்தம் அவர்களுக்கும் வேலூர் திரு. மு. பெருமாள் முதலியார் அவர்கள் மகள் திருவளர்செல்வி சத்திய குமாரிக்கும் திருமணம் 5-9-65 அன்று காலை வேலூரில் நிகழ்ந்தது. புது மணமக்கள் பன்னருநற்பேறுகள் பலவும் பெற்றுப் பல்லாண்டென்னும் பதங் கடந்தான் திருவருளால் நீடினிது வாழ அவனருளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 13, East Mada St., Mylapore, Madras-4.